[14th December 1961

(b) if so, the action taken on them?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes, Sir.

(b) The ban on lorry traffic on the following two prohibited roads has been removed with effect from 18th September 1961 :—

(i) Srivaikuntam to Pudukkottai (via) Eral;

(ii) Arumugamangalam, entire road. *Eral—Mukkani road*

SRI M. K. SOMASUNDARAM : அங்குள்ள கிராமங்களுக்கு உரம் முதலியவைகளை லாரிகள் மூலம் கொண்டுபோவதற்கு வசதி இல்லாமல் இருக்கிறது. இந்த ரோடுகளை அகலப் படுத்தி லாரிகள் போவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI V. RAMAIAH : லாரிகள் இந்த ரோடுகளில் போகலாம் என்று அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத்தான் படித்துக் காட்டினேன்.

State Transport (Workers)

* **2355-R. Q.—SRI V. K. KOTHANDARAMAN :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்கார் பஸ்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு பாட்டா எவ்வளவு கொடுக்கப்படுகிறது?

(இ) அதை அதிகப்படுத்தும் உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Daily batta to the workers in the Madras State Transport Department is paid at the following rates :—

A. *Drivers and Conductors*—	*Batta per day.*
	RS. NP.
(i) Engaged in routes less than 125 miles	1·12
(ii) Engaged in routes exceeding 125 miles but not exceeding 175 miles	1·75
(iii) Engaged in routes exceeding 175 miles ...	2·25

(iv) In addition to normal batta, the drivers in Express services in long distance routes are paid 25 per cent of the batta as extra.

B. *Supervisory traffic staff*—	
	RS. NP.
(i) Time-keepers	1·00
(ii) Checking Inspectors	1·25

C. Technical workers of the Madras Branch : For attending to breakdowns outside the headquarters—

(i) Technical staff on pay below Rs. 54	**0·75**

14th December 1961]

	RS. NP.
(ii) Technical staff between Rs. 55 and 79 per mensem	1·25
(iii) Technical staff between Rs. 80 and Rs. 124 per mensem	1·50
(iv) Technical staff between Rs. 125 and Rs. 199 per mensem	2·00
(v) Technical staff between Rs. 200 and Rs. 249 per mensem	2·50

(இ) The question rationalizing the rates of batta to certain classes of workers is under examination.

SRI V. K. KOTHANDARAMAN: தனியார் துறையிலே நடைபெறக்கூடிய பஸ்களில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்குக்கூட குறைந்த பட்சம் ரூ. 1-8-0 முதல் கொண்டு ரூ. 3 வரையில் 'பாடா' கொடுக்கப்படுகிறது. அப்படியிருக்கும் பொழுது மிகக் குறைந்த 'பாடா' சர்க்கார் டிரான்ஸ்போர்டில் கொடுக்கிற காரணத்தினால், தொழிலாளர்களுக்கு அதிருப்தி ஏற்படுகிறதல்லவா? ஆகையினால் உடனடியாக அதை அதிகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் சொல்லுகிற புள்ளிவிவரம் சரியல்ல. மிகப் பெரிய டிரான்ஸ்போர்ட் கம்பெனி ஒன்று இதைவிட குறைவாக டவுனில் 'பாடா' கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதனால் நாம் மற்றவர்களைவிட குறைவாக 'பாடா' கொடுக்கிறோம் என்று சொல்லுவது சரியல்ல. மொத்த ஊதியம் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு பார்த்தால் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் ஊதியம் மற்ற பிரைவேட் கம்பெனிகள் கொடுக்கிற ஊதியத்தைவிட அதிகமாக இருக்கிறது என்பதை தொழிலாளர்களே ஒத்துக்கொள்ளுகிறார்கள். அதை இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்பதில் சர்க்காருக்கு எதிர்ப்பு கிடையாது. சர்க்கார் அதைச் செய்வதற்கும் தயாராக இருக்கிறது. ஆனால், குறைவாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் ஒத்துக்கொள்ளுவதற்கு தயாராக இல்லை.

SRI M. KALYANASUNDARAM: ரூ. 1-2-0 என்ற ஒரு விகிதம் இருக்கிறது. அது மிகக் குறைவாக இருக்கிறது. தூரம் எவ்வளவு இருந்தபோதிலும் கூட, 8 மணி நேரம் எல்லோரும் வேலை செய்கிறார்கள். 'பாடா' கொடுப்பது அந்த நேரத்திற்கே தவிர, தூரத்திற்கு அல்ல. ஆகையினால், இதை அதிகப்படுத்துவதற்கு அந்த யூனியன் அரசாங்கத்தோடு இரண்டு வருஷங்களாக பேச்சுவார்த்தைகள் நடத்திவருகிறார்கள். அரசாங்கத்தார் ஏதோ சில நிபந்தனைகள் கொடுத்திருக்கிறார்கள். அந்த நிபந்தனைகளை தொழிலாளர்கள் ஏற்றுக்கொண்டாலாவது, இதை உயர்த்துவது பற்றி பரிசிலிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: இப்பொழுது 'லாங் டிஸ்டன்ஸ்' டிரான்ஸ்போர்ட் பஸ்ஸில் போகிறவர்கள் 8 மணி நேரம் நிச்சயம் அங்கு வேலை செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஏனென்றால் நடுவில் வேறு எங்கும் இறங்க முடியாது, வேலை செய்யாமல் வண்டியை விட்டுவிட்டு போக முடியாது. ஆனால் ஸிடி டிரான்ஸ்போர்ட்டில் இருப்பவர்கள் 6 மணி நேரம் வேலை செய்து விட்டு திரும்பிப் போய்விடுகிறார்கள். ஏழு மணி நேரம் வேலை செய்துவிட்டு திரும்பிப் போய்விடுகிறார்கள். அதனால் 'வெஹிகள்' 'ரன்' பண்ணுவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ராஜ்ய சர்க்கார் அதற்காக ஒரு திட்டம் கொடுத்திருக்கிறார்கள். எட்டு மணி நேரம் பூராவும் அவர்கள் 'டியூடி கம்ப்ளீட்' செய்தால் நாங்கள் ரூ. 1-8-0 'பாடா' கொடுக்கிறோம், அதைவிட குறைவாக செய்தால், 'ப்ரொபோர்ஷனேட்டாக' குறைவாகக் கொடுக்கிறோம் என்று சொன்னோம். அதை ஒத்துக்கொள்ளுவார்கள் என்றால், கலியாணசுந்தரம் அவர்கள் இப்பொழுது அவர் தொழிற் சங்கத்தைஒத்துக் கொள்ளச் செய்வதாக இருந்தால், சர்க்கார் அந்த நிபந்தனைக்கு உட்பட்டு, ரூ. 1-8-0 கொடுப்பதற்கு என்றைக்கும் தயாராக இருக்கிறது . இதைத் தொழிலாளர்கள் ஐந்து, ஆறு மாதமாக பெறாமல் இருப்பதற்குக் காரணம் அந்த யூனியன் இதை ஒத்துக்கொள்ளாத காரணம்தான்.

9-30 a.m. SRI T. S. RAMASWAMI: May I know why some of the staff working in the Kanyakumari branch are not given any batta while those working in the corresponding posts in Madras are given the same? In spite of the fact that the Hon. Minister, when he visited that place, had accepted the logic behind the proposal and was sympathetic towards them, may I know why they were not paid any batta?

THE HON. SRI R. VENKATARAMAN: In the Kanyakumari branch, there are two types of employment conditions, one for those who are governed by the old Travancore-Cochin State Rules and those who are governed by the Madras Rules. So far as those who are governed by the Madras Rules are concerned, the Government will see that absolute uniformity is maintained between the Kanyakumari and Madras City branches. If there are any difficulties with reference to those people, I would request the hon. Member to write to me and I will attend to the matter.

SRI N. R. THIAGARAJAN: ஸார், ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன். எதிர்க்கட்சியைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் ஒருவரும் இல்லையே. இது வருங் காலத்தின் அறிகுறியா என்று அறிய விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER: The hon. Member cannot expect the Chair to reply to this question.

Polur Panchayat (teachers)

* 2355-S Q.—SRI S. M. ANNAMALAI: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் போளூர் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் அடிக்கடி ஆசிரியர்கள் மாற்றப்படுவது சர்க்காரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதா?